Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 324/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | தங்கவேல் |
| Father's Name | -- | ராமசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 12th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது செங்குட்டுபாளையத்தில் குடியிருந்துவருகிறேன். நான் மேஷன் வேலை பார்த்துவருகிறேன். அசா.1 ராமசந்திரனை எனக்கு தெரியும். கடந்த 2018 ம் வருடம் 3ம் மாதம் ஒரு நாள் காலை 6.15 மணியளவில் நான் வேலைக்கு சென்றுவிட்டு எனது வண்டியில் வந்துகொண்டிருந்தபோது ராசக்காபாளையத்தில் இருந்து ஆலாம்பாளையம் பிரிவு அருகே வந்துகொண்டிருந்தபோது பால் வண்டி ஒன்று தெற்கிலிருந்து வடக்குநோக்கி வந்தபோது எனது அண்ணன் மகன் தனது இரு சக்கர வாகனத்தில் எதிர் திசையில் ஏற்றத்தில் வந்துகொண்டிருந்தார். பால் வண்டி அவர் மீது அடித்துவிட்டது. நான் சென்றுபார்த்தபோது அவரது மண்டை இரண்டாக பிளந்து மூளை சிதறிகிடந்தது. பின்பு அடிபட்டவரை ஆம்புலன்ஸ் ல் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். நான் பின்னால் வண்டியில் சென்று பார்த்தேன். இதுசம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தனர்.

எதிரிதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2
பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 324/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | மாரிமுத்து |
| Father's Name | -- | முருகன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 12th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது ஆலாம்பாளையத்தில் குடியிருந்துவருகிறேன். நான் தற்போது கூலி வேலைபார்த்துவருகிறேன்.முன்புபால்கம்பெனியில்வேலைசெய்துகொண்டிருந்தேன்.25.03.2018 ம் நாள் காலை 5.30 மணியளவில் ஓட்டுநர் பெருமாள் பிக்கப் வாகனத்தை ஓட்ட நான் விற்பனையாளராக அவருடன் சென்றேன். புளியம்பட்டியில் இருந்து ராசக்கபாளையம் நோக்கி காலை 6 முதல் 6.30 மணியளவில் வந்துகொண்டிருந்தபோது , நாங்கள் இறக்கத்தில் வந்துகொண்டிருந்தபோது, 2 வீலர் ஒன்று எதிர் திசையில் ஏற்றத்தில் வந்துகொண்டிருந்தது. எதிரே 2 வீலர் வந்ததால் பெருமாள் வண்டியை இடது எடுத்து வலது எடுத்தார். அதனால் வண்டி அப்செட் ஆகி கவிழ்ந்துவிட்டது. அதனால் எனக்கு இடது கையிலும், நெஞ்சிலும் காயம் ஏற்பட்டது. இரு சக்கர வாகனத்தில் வந்தவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்று கேள்விபட்டேன். என்னை பொள்ளாச்சி அரசுமருத்துவமனையில் சேர்த்தார்கள். போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

எதிரிதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2
பொள்ளாச்சி